SINGAPORE LITERATURE PRIZE 2018 RULES & REGULATIONS

**சிங்கப்பூர் இலக்கிய பரிசு** 2018 **விதிமுறைகளும் நிபந்தனைகளும்**

*1. **பிரிவு***

(அ) 2016 ஜனவரி 1-கும் 2017 டிசம்பர் 31-கும் இடையே, சிங்கப்பூர் குடிமகன் அல்லது நிரந்தரவாசியால் உருவாக்கப்பட்டு நூல் வடிவில் சிங்கப்பூரில் அல்லது வெளிநாட்டில் பதிப்பிக்கப்பட்ட எந்த ஒரு புதினம், கவிதை மற்றும் புதினம் அல்லாத படைப்பு ஆகியவற்றுக்கு இந்த விருது வழங்கப்படும்.

*2. **தலைப்பும் கருப்பொருளும்***

(அ) போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகள் எந்தத் தலைப்பிலும் அல்லது கருப்பொருளிலும் இருக்கலாம்.

(ஆ)இந்த விருதின் தொடர்பில், இலக்கியப் புதினம் அல்லாத ஒன்று என்பதை, உண்மையான நிகழ்வுகள், மக்கள் அல்லது கருத்துகளைக் கொண்டு இலக்கிய நடையைப் பயன்படுத்தி உருவாக்கும் கதை இலக்கியம் என நாங்கள் வரையறுக்கிறோம். இத்தகைய இலக்கிய நடையின் எடுத்துக்காட்டுகளில், இலக்கிய விமர்சனம், வாழ்க்கை வரலாறு, உணவு பற்றிய எழுத்துப்படைப்பு, இலக்கிய இதழியல் படைப்புகள், வாழ்க்கைக்குறிப்புகள், தனிநபர் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள், ஆகியவை அடங்கும். ஆனால் சமையல் புத்தகங்கள், சுய உதவிக் கையேடுகள்,பயண வழிகாட்டி நூல்கள், அல்லது பாடப் புத்தகங்கள் இதில் அடங்கா. பொதுமக்கள் படிப்பதற்கு கிடைக்கக்கூடியவையாக படைப்பு இருப்பதுடன் சிறப்புப்பிரிவினர் அல்லது கல்வித்துறை சார்ந்த வாசகர்களுக்காக இருக்கக்கூடாது.

*3. **மொழி***

(அ) தாக்கல் செய்யப்படும் படைப்புகள், பின்வரும் அதிகாரபூர்வ மொழிகள் ஏதேனும் ஒன்றில் எழுதப்பட்டிருக்கவேண்டும்: **ஆங்கிலம்**, ***சீனம்***, **மலாய் அல்லது தமிழ்**.

(ஆ) இந்த விருதின் தொடர்பில், மொழிபெயர்ப்புகள் எந்த மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளனவோ அம்மொழியின் தகுதி அடிப்படையில் அது தீர்மானிக்கப்படும், அதன் மூல மொழியில் அதற்குக் கிடைத்த பாராட்டுகள் அல்லது குறைகூறல்களுக்கு எவ்வித மதிப்பும் கொடுக்கப்பட மாட்டாது.

*4. **தகுதி***

(அ) 2017 டிசம்பர் 31 அன்று குறைந்தது 18 வயதுக்குட்பட்ட எல்லா சிங்கப்பூர் குடிமக்கள் மற்றும் நிரந்தரவாசிகள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.

(ஆ) தாக்கல் செய்யப்படும் ஒவ்வொரு படைப்பும் அனுப்புபவரால் எழுதப்பட்ட மூலப் படைப்பாக இருக்கவேண்டும்.

(இ) பல படைப்பாளர்களால் எழுதப்பட்ட சிறு கதைகள், கவிதை, அல்லது கட்டுரைகளின் திரட்டுகள் இந்த விருதுக்குத் தகுதி பெற மாட்டா.

(ஈ) பதிப்பிக்கப்பட்ட படைப்புகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தகுதி பெற, படைப்புகள் நூல் வடிவத்தில் பதிப்பிக்கப்பட்டு வர்த்தக அடிப்படையில் வெளியிடப்படுவதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

(உ) உள்ளடக்கத்தின் கணிசமான விழுக்காடு, நூல் வடிவில் 2016 ஜனவரி 1ம் தேதிக்கு முன்னர் பதிப்பிக்கப்பட்டிருக்கக் கூடாது.

(ஊ) இந்த விருதுகள் தொடர்பில், இதற்கு முன்னர் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் அல்லது இணையத்தளங்கள் ஆகியவற்றில் 2016 ஜனவரி 1ம் தேதிக்கு முன்னர் பதிப்பிக்கப்பட்ட சிறுகதைகள், கவிதைகள் அல்லது கட்டுரைகள் ஆகியவற்றின் நூல் வடிவிலான திரட்டுகள் தகுதி பெறுபவையாகக் கருதப்படுவதுடன் , மறுபதிப்புகளாகக் கருதப்படமாட்டாது.

*5. **அனுப்பப்படும் படைப்புகளின் எண்ணிக்கை***

(a) படைப்பை அனுப்புவர், ஒரு படைப்புக்கும் மேலாக போட்டிக்கு அனுப்பி வைக்கலாம், ஆனால் அத்தகைய படைப்புகள் வெவ்வேறு படைப்புகளாக இருக்கவேண்டும். ஒரே படைப்பின் மாற்றுருவங்களாக இருக்கக்கூடாது.

(b) இந்த விருதுக்காலத்தின்போது ஒரே படைப்பு ஒரு மொழிக்கும் மேலான மொழிகளில் தாக்கல் செய்யப்படக்கூடாது.

(c) படைப்புகளை படைப்பாசிரியர் அல்லது பதிப்பாளர் தாக்கல் செய்யலாம்.

*6. **தேர்ந்தெடுத்தல்***

(அ) ஒவ்வொரு பிரிவுக்கும், ஒவ்வொரு மொழிக்கும் மூவர் அடங்கிய நடுவர் குழு இருக்கும்.

(ஆ) நடுவர்களின் முடிவு இறுதியானது, அது எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடியது. நடுவர்களின் முடிவு குறித்து எவ்விதக் கடிதப்போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

*7. **இறுதி நாள்***

(அ) போட்டிக்கு படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள், 2018 ஜனவரி 19ம் தேதி, மாலை 5.00 மணி.

*8. **தாக்கல் செய்யப்படும் புத்தகம்***

(அ) அனுப்பிவைக்கப்படும் படைப்புகள் ஏதேனும் இடைவழியில் காணாமல்போனால் அல்லது சேதமடைந்தால் அதற்கு ஏற்பாட்டாளர்கள் பொறுப்பேற்கமாட்டார்கள்.

(ஆ) சிங்கப்பூர் இலக்கிய பரிசுக்காக தாக்கல் செய்யப்படும் புத்தகங்களை புத்தக மன்றம் தன்வசம் வைத்துக்கொள்வதுடன் அவற்றைத் திரும்பத் தராது.

*9. **விருது***

(அ) மூன்று பிரிவுகளிலும், ஒவ்வொரு நான்கு மொழிப் பிரிவுகளிலும் வெற்றிபெறுபவர்களுக்கு சிங்கப்பூர் இலக்கிய பரிசு $10,000-யை வழங்கும். மேலும், வெற்றியாளர்களுக்குச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட வெற்றிக்கோப்பைகளும் வழங்கப்படும்.

(ஆ) போட்டிக்காக ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு மொழிக்கும் ஒரு விருதை மட்டுமே நீதிபதிகள் முடிவு செய்து வழங்குவர். தாக்கல் செய்யப்பட்ட படைப்புகளில் ஏதேனும் ஒன்று விருதுக்குத் தகுதி பெறாவிட்டால், யாரையும் வெற்றியாளராக நடுவர்கள் அறிவிக்க மாட்டார்கள்.

(இ) வெற்றியாளர் யாரும் இல்லை என்ற பட்சத்தில், ஒவ்வொரு பிரிவுக்கும் $5,000 தகுதிமிகு பரிசுகளை அல்லது $1,000 பாராட்டுப் பரிசுகளை நீதிபதிகள் வழங்குவர்.

ஒவ்வொரு பிரிவிலும், ஒவ்வொரு மொழிக்குமான மொத்த பரிசுத் தொகை $10,000-கும் மேல் போகாதிருக்கும்.
(ஈ) மூலப் படைப்பாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் சிங்கப்பூர் குடிமகனாக அல்லது நிரந்தரவாசியாக இருக்க வேண்டும் என்பதுடன் மொழிபெயர்க்கப்பட்ட படைப்பு வெற்றி பெற்றால் பரிசை சரிசமமாக பகிர்ந்துகொள்ளவும் வேண்டும்.

*10. **இறுதிப் பரிசீலனைக்கான பட்டியல்***
(a) சிங்கப்பூர் இலக்கிய பரிசுக்கான படைப்புகளின் இறுதிப் பரிசீலனைக்கான பட்டியலை ஏற்பாட்டாளர்கள் 2018 மே மாதத்தில் அறிவிப்பர்.

*11. **வெற்றியாளர்கள் பற்றிய அறிவிப்பு***
(அ) எல்லா வெற்றியாளர்களுக்குமான பரிசுகள் 2018 ஜூலை மாதம் நடைபெறும் விருதளிப்பு சடங்கில் வழங்கப்படும். விருதளிப்பு சடங்கிற்கு முன்னர் வெற்றியாளர்களுக்கு அது பற்றி **அறிவிக்கப்படமாட்டாது**. இறுதிப் பரிசீலனைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து படைப்பாளர்களும் அழைக்கப்படுவர். ஏதேனும் ஒரு காரணத்திற்காக, இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்பாளர்கள் கலந்துகொள்ள இயலாவிட்டால், அவர்களின் சார்பாக கலந்துகொள்ள ஒரு பிரதிநிதியை அவர்கள் முன்மொழிய வேண்டும் என்பதுடன் படைப்புக்குப் பரிசு கிடைத்தால் அவர்களின் சார்பாக பரிசுகளை பெற்றுக்கொள்ளவும் வேண்டும்.

*12. **பொறுப்பு***
(அ) இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் வெற்றி பெற்ற படைப்பாளர்கள், பொது உரைகள் ஆற்ற, பயலிரங்குகள் நடத்த, மேலும்/அல்லது அறிவுரை வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள அழைக்கப்படுவர்.
(ஆ) இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் வெற்றிபெற்ற படைப்பாளர்களும் ஊடகத்துறையினரிடம் பேசவேண்டும் என்பதுடன் ஊடக நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள வேண்டும். அதோடு சிங்கப்பூர் இலக்கிய பரிசு தொடர்பான சந்தைப்படுத்தும் மற்றும் விளம்பரப்படுத்தும் புத்தக மன்றத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவேண்டும்,

*13. **தாக்கல் செய்யும் முறை***
(அ) எல்லா படைப்புகளையும் பதிவு செய்யப்பட்ட தபாலில் அல்லது நேரடியாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கொடுக்கலாம்:

Singapore Literature Prize (SLP) 2018
National Book Development Council of Singapore
Goodman Arts Centre Blk E #03-32
90 Goodman Road Singapore 439053
(ஆ) ஒவ்வொரு படைப்புடனும் அதன் **நான்கு** (4) பிரதிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(இ) தாக்கல் செய்யப்படுவனவற்றில், போட்டியில் கலந்துகொள்வதற்கான பூர்த்திசெய்யப்பட்ட பாரத்தின் மென் பிரதிகளைக்கொண்ட யுஎஸ்பி தரவக்கோல் கருவி, ஒரு சுறுக்கமான தன்விவரங்கள் (50 சொற்களுக்கு மேற்போகாமல்), படைப்பாளரின்

புகைப்படம் ஒன்று, அவரின் அடையாள அட்டையின் பிரதி பின்வரும் வடிவத்தில் இருக்கவேண்டும்:

1. போட்டியில் பங்குபெறுவதற்கான படிவம்: PDF, JPG, DOC
2. சிறு தன் குறிப்புத் தகவல்: PDF, DOC
3. புகைப்படம்: JPG (குறைந்தது 300dpi வடிவத்தில் இருக்கவேண்டும், கைகளில் ஒரு பொருளும் இல்லாமல் வெள்ளை அல்லது நிறமற்ற பின்னணியில் படைப்பாளரின் புகைப்படம் இருக்கவேண்டும்)
4. அடையாள அட்டை பிரதி: PDF, JPG

| **முக்கியமான தேதிகள்** | **தாக்கல் செய்யும் தேதி** |
|---|---|
| 2017 **நவம்பர்** 20 | **தொடக்கம்** |
| 2018 **ஜனவரி** 19 | **தாக்கல் செய்யும் தேதி முடிவடைதல்** |
| 2018 **மே** | **இறுதிப் பரிசீலனைக்கான படைப்புகள் பற்றி அறிவித்தல்** |
| **ஜூலை** 2018 | **பரிசு பெற்றவர்களுக்கான விருதளிப்பு சடங்கு** |